# தமிழ் நாடெங்கும் ஹிந்திக் கண்டனக் கூட்டங்கள்.

## லால்குடி.

(நமது நிருபர்)

லால்குடி, நவ. 29

தோழர்கள் எஸ். சோமசுந்தர பாரதியார் எம். ஏ. பி. எல்., கி. ஆ. பெ. விசுவநாதம், அ. பொன்னம்பலனார், ஈழத்துச்சிவானந்த அடிகள் முதலியவர்கள் 27-11-37 இரவு 11 மணிக்கு துறையூரிலிருந்து லால்குடி ராவ்சாகேப் எல். என். பரமசிவம் பிள்ளை அவர்கள் இல்லத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களை வரவேற்று ராவ் சாகேப் எல். என் பரமசிவம் பிள்ளை அவர்களும் தமிழ்ப்பண்டிதர் அ. மு. சரவண முதலியார் அவர்களும் உபசரித்தார்கள்.

28-11-37 காலை 8-30 மணிக்கு தலைவர்களை தமிழ் கொடி பேண்ட் வாத்தியங்களுடன் மோட்டாரில் ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். வீதிகள் முழுதும் "தமிழ் வாழ்க" "ஹிந்தி வீழ்க" "ஹிந்தி கட்டாயப் பாடமாக்கும் கொடுமை ஒழிக" என்ற கோஷங்களுடன் ஊர்வலம் லால்குடி போர்டு ஹைஸ்கூல் ஹாலை அடைந்தது. இக்கூட்டத்திற்கு உள்ளூர் வெளியூர் பொது மக்கள் சுமார் 2000 பேர்கட்குமேல் விஜயம் செய்திருந்தார்கள்.

தோழர் எஸ். கணேசன் அவர்கள் தமிழ் கீதம் பாடினார். வரவேற்புக் கழகத் தலைவர் லால்குடி ராவ்சாகேப் எல். என். பரமசிவம்பிள்ளை அவர்கள் தலைவர்களையும் பொது மக்களையும் வரவேற்று ஹிந்தியைக்கட்டாய பாடமாக்குவதால் தமிழர் வாழ்வு குன்றும் என்றும் தமிழ் மொழி வளர்ச்சி பாதிக்கப்படும் என்றும் மூன்று பாரம் வரை படிக்கும் ஹிந்தியால் நமது இளம் மாணவர்கள் என்னபயன் பெற முடியும் என்றும் காங்கரஸ் மந்திரிகள் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கும் முயற்சியில் தலையிட்டிருப்பது தமிழ் மொழிக்கும் தமிழ்நாட்டுக்கும் பெரும் கேடு பயப்பதாகுமென்றும் மிகத்தெளிவாகவும் விரிவாகவும் உணர்ச்சியும் வீரமும் ததும்பப் பேசினார்.

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பேராசிரியர் தோழர் எஸ். சோமசுந்தர பாரதியார் அவர்கள் தலைமை வகித்து முன்னுரையாக ஹிந்தியைக் கட்டாயபாடமாக வைப்பது தமிழர் கட்கும் தமிழ் மொழிக்கும் தமிழர் நாகரிகத்திற்கும் அழிவு தேடுவதாகும் என்பது பற்றி பேசினார்.

அதன் பிறகு கரந்தை தமிழ்ச் சங்கத்தலைவர் ராவ்சாகேப் டி. வி. உமாமகேசுவரம் பிள்ளை பி. ஏ. பி. எல். அவர்கள் தமிழ் மொழிச்சிறப்பு, தமிழர்பெருமை, தமிழர் வீரம், தமிழர் நாகரிகம், ஆகியவைகளைப் பற்றி விளக்கமாகப் பேசினார். திருச்சி தோழர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களும் பொள்ளாச்சி காங்கரஸ் கமிட்டி தலைவரும், முனிசிபல் கவுன்சிலரும் பிரபல தேசபக்தருமாகிய தோழர் ராமலிங்கம் அவர்களும் கீழ்க்கண்ட தீர்மானங்களை பிரேரேபித்தும் ஆமோதித்தும் உணர்ச்சியும், வீரமும் ததும்பப் பேசினார்கள்.

### தீர்மானங்கள்.

(1) தமிழ்நாட்டில் ஹிந்தி மொழியைக் கட்டாய பாடமாக்கச் செய்கின்ற முதன் மந்திரி அவர்களின் எதேச்சதிகாரச் செயலை இப்பொதுக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

(2) தமிழ் மாகாணத்தை தனி மாகாணமாகப் பிரிக்க வேண்டுமென அரசாங்கத்தாரை இப்பொதுக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

(3) தமிழ் நாட்டிலுள்ள தமிழ் அறிஞர்களும், தமிழ்ப் புலவர்களும, தமிழ் மக்களும தமிழ்ச் சங்கங்களும், பொதுமக்களும ஹிந்தியை எதிர்த்து, கண்டித்து கிளர்ச்சி செய்து வருவதை அறிந்தும் பொதுஜன அபிப்பிராயத்திற்கு சிறிதும் மதிப்புக் கொடாமல் காங்கரஸ் தலைவர் முத்துரங்க முதலியார் அவர்கள் ஹிந்தி தினத்தைக் கொண்டாடும்படி காங்கரஸ் கட்சியாரைத் தூண்டுவதை நாட்டில் பிளவையும், கலவரத்தையும் உண்டாக்க விரும்புவதாகவே இப்பொதுக் கூட்டம் கருதுவதுடன், இந்த எதேச்சதிகார அறிக்கையையும் வன்மையாகக் கண்டிக்கிறது.

இத்தீர்மானங்கள் பெருத்த கரகோஷத்துடனே நிறைவேறின. பின்னர் தலைவர் முடிவுரையில் தீர்மானங்களை விளக்கி விரிவுரையாற்றினார். அதன் பிறகு தமிழ்ப்பண்டிதர் அ. மு. சரவண முதலியார் அவர்கள் தலைவர்களுக்கும், பொதுமக்களுக்கும், இக்கூட்ட ஒத்துழைப்பாளர்களுக்கும், பிறஉதவி செய்தவர்களுக்கும் நன்றி தெரிவித்து தலைவர்களுக்கு மலர் மாலை சூட்டினார். இத்துடன் பிற்பகல் 1-15-மணிக்கு இக்கூட்டம் இனிது முடிந்தது.

### லால்குடி போர்டுஹைஸ்கூல் ஹாஸ்டலைப் பார்வையிடல்.

இங்கு விஜயம் செய்த தலைவர்கள் லால்குடி ஹைஸ்கூல் ஹாஸ்டல் கட்டிடங்களைப் பார்வையிட்டார்கள். ஹாஸ்டல் மாணவர்களுக்கு "உண்மை" என்ற பொருள்பற்றி தோழர் எஸ். எஸ். பாரதியார் உபதேசம் செய்தார். மாணவர்கள் நன்றி தெரிவித்தார்கள்.

### விருந்து.

தலைவர்களுக்கும் வெளியூர் தோழர்களுக்கும் ராவ்சாகேப் எல். என். பரமசிவம் பிள்ளை அவர்கள் அவர்களுடைய இல்லத்தில் சிறந்த விருந்தளித்து தலைவர்களை வழியனுப்பி வைத்தார்கள்.

## கரூர்.

(ஒரு நிருபர்)

கரூர், நவ- 29.

நேற்று மாலை 6 மணிக்கு இவ்வூர் அமராவதி ஆற்றில் த. நா. காங்கரஸ் கமிட்டித்தலைவர் தோழர் முத்துரங்க முதலியாரின் 24-11-37 தேதி அறிக்கையின்படி ஹிந்தி தினம் கொண்டாடுவதற்காக ஒரு கூட்டம் இவ்வூர் முதன் மந்திரி வர்க்கத்தாரால் கூட்டப் பெற்றது. கரூர் முனிசிபல் எல்லைக்குட்பட்ட மக்களின் தொகை சுமார் 30000 பேர்களாகும். அதில் இக்கூட்டத்திற்கு வந்திருந்தவர்களின் தொகை 45 பேர்களாகும். ஹிந்தி தினக் கொண்டாட்டமென்று பெயர் வைத்துக்கொண்டு அதில் பேசியவர்கள் ஹிந்தியின் அவசியத்தைப்பற்றி ஒன்றும் கூற முடியாமல் தங்கள் தங்கள் பெருமைகளைப்பற்றியே பேசிக்கொண்டிருந்ததால் வந்திருந்தவர்களில் பாதிப்பேருக்கு மேல் வெறுப்படைந்து இத்தகைய கூட்டத்திற்கு ஏன் வந்தோமென்று எழுந்து போய்விட்டனர். மீதி இருந்தவர்களில்பல பேர் ஹிந்தியை எதிர்த்துப் பேசினார்கள். இன்னும் பலர் கடந்த 20-11-37ல் நடந்த ஹிந்தி எதிர்ப்புக்கூட்டத்தில் தோழர் சோமசுந்தர பாரதியார் அவர்களின் பிரசங்கத்தைக் கேட்டவர்கள் இனி இத்தகைய ஏமாற்றுக்கூட்டங்களை ஆதரிக்கமாட்டார்கள் என்று கூறி எழுந்து போய்விட்டனர். பலர் பாரதியார் இவ்வூரில் தலைமை வகித்து நடத்திய ஹிந்தி எதிர்ப்புக் கூட்டத்தைப்போல் ஒரு பெரிய கூட்டம் நடந்ததில்லை என்றும் இன்று நடந்த சூழ்ச்சி நிறைந்ததும் ஆட்கள் குறைந்ததுமான இச்சிறிய கூட்டத்தைப்போல் ஒருகூட்டம் இதுவரை நடந்ததில்லை என்றும் கூறிவிட்டுக்கூட்டத்தை விட்டுப் போனார்கள்.

## ஓமலூர்.

(ஒரு நிருபர்)

ஓமலூர், நவ. 28

28-11-37 மாலை 5 மணிக்கு சென்னை தமிழர் கழகத்திலிருந்து அனுப்பப்பட்டவேண்டுகோளுக்கிணங்க ஹிந்திக் கண்டன ஊர்வலம் ஜின்னா சவுக்கிலிருந்து கொடிகளுடன் ஹிந்தி ஒழிக, தமிழ் வாழ்க என்ற கோஷத்துடன் இந்து, முஸ்லீம்கள் அடங்கிய ஊர்வலம் முக்கிய தெருக்களின் வழியாய் ஜின்னா சவுக்கை யடைந்தது. அங்கு தோழர் வி. அப்பாய் நாயுடு அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் ஆரம்பமாயிற்று. தோழர்கள் எஸ். கே. கந்தசாமி, எஸ். ஆர். அர்த்தநாரி, டி. வி. கதிர் செட்டியார், காஜி மகமத்மீரான் ஆகியவர்கள் ஹிந்தியின் தீமைகளையும் காங்கரஸ் மந்திரிகளின் பிற்போக்கான செய்கைகளையும் விளக்கி சொற்பொழிவாற்றினார்கள்.

நிறைவேறிய தீமானங்கள்.

1. ஹிந்தியைக கட்டாயப் பாடமாக்குவதை இக்கூட்டம் வன்மையாய்க் கண்டிக்கிறது.

2. தமிழ் நாட்டை ஒரு தனி மாகாணமாகப் பிரித்துவிட வேண்டுமென்று இக்கூட்டம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறது. என்ற இரு தீர்மானங்களையும் தோழர் எஸ். கே. நரசிம்மலு பிரரேபித்துப் பேசினார். தோழர் ஜெயராம் தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய பின் கரகோஷத்தினிடையே தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின. ஜனாப் அலாவுதின் சாயபு அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

## பாகனேரி.

(ஒரு நிருபர்)

பாகனேரி, நவ. 28

இன்று மாலை 6 மணிக்கு இவ்வூர் தனவைசிய இளைஞர் தமிழ்ச் சங்கத்தில் தோழர். வெ. பெரி பழ. மு. காசி விசுவநாதன் செட்டியாரவர்கள் தலைமையில் ஹிந்தி எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது.

போர்டு ஆண் பாடசாலை உபாத்தியாயர் தோழர் என் குப்புசாமி பிள்ளை அவர்கள் கீதம் பாட கூட்டம் ஆரம்பமாயிற்று. பின் புவனகிரி தோழர் ம- சு. அருணாசலஞ் செட்டியார் அவர்களும் தோழர் ராம. அ. அ சிவ கண்ணப்பன் அவர்களும் ஹிந்தியை எதிர்த்தும், தமிழ் கல்வியின் அவசியத்தைப் பற்றியும் மிக விரிவாகவும், அழகாகவும் பேசினார்கள். தலைவர் அவர்களின் விரிவான முடிவுரைக்குப் பின் கிழ்க்கண்ட தீர்மானம் ஒரே மனதாக நிறைவேறியது.

'நமது நாட்டில் தமிழ் மொழியே போதிய வளர்ச்சி இல்லாதிருக்கும் இந்நாளில் நம் மாகாணத்தில் ஹிந்தி மொழியைக் கட்டாயப் பாடமாக்க, காங்கரஸ் மந்திரி சபையார் நினைப்பதை இக்கூட்டம் எதிர்ப்பதுடன், தமிழைக் கட்டாயப் பாடமாக்கும்படியாக மந்திரிசபையாரை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது"

## லண்டனில் ஹிந்து தேவாலயம்.

### கட்ட ஏழுலக்ஷம் தேவை.

### இந்திய ஹிந்துக்களுக்கு வேண்டுகோள்.

பம்பாய், டிச. 1

லண்டனில், சபா மண்டபம் புத்தகாலயம் முதலியவைகளைக்கொண்ட பெரிய ஹிந்து தேவாலயம் ஒன்றுகட்ட வெகு நாட்களாக இந்தியாவில் உள்ள ஹிந்துக்கள் யோசித்து வந்தார்கள்.

கல்கத்தாவிலுள்ள கோடிய மிஷன் சங்கத்தார் இதைப்பற்றி துரிதமான நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். இந்த மிஷனைச் சேர்ந்த சுவாமி போன் அவர்கள் பணம் வசூல் செய்வதற்கும் கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுவதற்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறார். இங்